ஆறாம் வகுப்பு - இரண்டாம் பருவம்
(பொதுப் பாடத்திட்டம்)

1. எண்கள்

1) ஓர் எண்ணை இரண்டின் குழுக்களாகப் (இரண்டு இரண்டாக) பகுக்க இயலாது எனில், அது ஒற்றை எண் எனப்படும்.

1, 3, 5, 7, 9, ...73, 75, ..., 2089, ...

ஆகியவை ஒற்றை எண்கள் ஆகும்.

2) ஓர் எண்ணை இரண்டின் குழுக்களாகப் (இரண்டு இரண்டாக) பகுக்க இயலும் எனில், அது இரட்டை எண் எனப்படும்.

2, 4, 6, 8, ...68, 70, ..., 4592, ...

ஆகியவை இரட்டை எண்கள் ஆகும்.

3) எல்லா ஒற்றை எண்களும் 1, 3, 5, 7, அல்லது 9 ஆகிய ஏதாவது ஓர் இலக்கத்தில் முடியும்.

4) எல்லா இரட்டை எண்களும் 0, 2, 4, 6, அல்லது 8 ஆகிய ஏதாவது ஓர் இலக்கத்தில் முடியும்.

5) முழு எண்களில், ஒற்றை எண்களும் இரட்டை எண்களும் அடுத்தடுத்து வரும்.

6) இரு ஒற்றை எண்களின் கூடுதலானது எப்போதும் ஒரு இரட்டை எண் ஆகும்.

7) இரு ஒற்றை எண்களின் பெருக்கற்பலன் எப்போதும் ஒரு ஒற்றை எண் ஆகும்.

V.ARUMUGAM, M.Sc.,M.Ed.,
கற்கண்டு கணிதம்
9486136884
(whats App)
http://tnpsc-shortcut-maths.blogspot.in/

8) ஒர் ஒற்றை எண்ணையும் ஒர் இரட்டை எண்ணையும் கூட்டினால் எப்போதும் ஒர் ஒற்றை எண்ணே கிடைக்கும்.

9) ஒர் ஒற்றை எண்ணையும் ஒர் இரட்டை எண்ணையும் பெருக்கினால் எப்போதும் ஒர் இரட்டை எண்ணே கிடைக்கும்.

10) மூன்று ஒற்றை எண்களைப் பெருக்கினால் எப்போதும் ஒர் ஒற்றை எண்ணே கிடைக்கும்.

11) 0 என்ற எண்ணானது ஒர் இரட்டை எண் ஆகும்.

12) இயல் எண்களில் முதல் எண் ஆனது ஒர் ஒற்றை எண் (1). ஆகும்.

13) முழு எண்களில் முதல் எண் ஆனது ஓர் இரட்டை எண் (0) ஆகும்.

14) காரணிகள்:

i) கொடுக்கப்பட்ட ஒர் எண்ணை மீதியின்றி வகுக்கும் ஒர் எண்ணானது அதன் காரணி ஆகும்.

ii) ஒவ்வொர் எண்ணிற்கும், 1 மற்றும் அதே எண் காரணிகளாக அமையும்.

iii) ஓர் எண்ணின் ஒவ்வொரு காரணியும், அந்த எண்ணின் மதிப்பிற்குக் குறைவாகவோ அல்லது சமமாகவோ இருக்கும்.

V.ARUMUGAM, M.Sc.,M.Ed.,
கற்கண்டு கணிதம்
9486136884
(whats App)
http://tnpsc-shortcut-maths.blogspot.in/

15) மடங்குகள்:

i) ஓர் எண்ணின் ஒவ்வொரு மடங்கும் அந்த எண்ணை விட அதிகமாகவோ அல்லது சமமாகவோ இருக்கிறது.

ii) ஓர் எண்ணின் மடங்குகள் முடிவற்றவை.

16) 1 ஐ விட அதிகமான ஓர் இயல் எண்ணானது, 1 மற்றும் அதே எண்ணை மட்டுமே காரணிகளாகப் பெற்றிருப்பின், அந்த எண் பகா எண் எனப்படும்.

எ.கா. $2 = 1\times2$, $13 = 1\times13$

17) ஓர் இயல் எண்ணானது இரண்டிற்கும் மேற்பட்ட காரணிகளைப் பெற்றிருப்பின், அந்த எண் பகு எண் எனப்படும்.

எ.கா. $15 = 1\times3\times5$, $70 = 1\times2\times5\times7$

18) ஓர் எண்ணின், அந்த எண்ணைத் தவிர்த்த மற்ற காரணிகளின் கூடுதலானது, அதே எண்ணைத் தரும் எனில், அது செவ்விய எண் அல்லது நிறைவு எண் எனப்படும்.

எ.கா. $6 = 1+2+3$

$28 = 1+2+4+7+14$

8/4 17

19) எரடோஸ்தனிஸ் சல்லடை என்பது கொடுக்கப்பட்ட எண் வரையில் பகா எண்களைக் கண்டறிய உதவும் ஓர் எளிய நீக்கல் முறை ஆகும். இந்த முறையைக் கிரேக்க நாட்டின் அலெக்சாண்டிரியாவைச் சார்ந்த கணிதவியலாளர் எரடோஸ்தனிஸ் என்பவர் கண்டறிந்தார்.

V.ARUMUGAM, M.Sc.,M.Ed.,
கற்கண்டு கணிதம்
9486136884
(whats App)
http://tnpsc-shortcut-maths.blogspot.in/

20) 100 வரையிலான எண் தொகுதியில் மொத்தம் 25 பகா எண்கள் உள்ளன. அவை
2, 3, 5, 7, 11, 13, 17, 19, 23, 29,
31, 37, 41, 43, 47, 53, 59, 61, 67,
71, 73, 79, 83, 89, 97 ஆகும்.

21) 5 ல் முடியும் ஒரே பகா எண் 5 ஆகும்.

22) ஒரு சோடி பகா எண்களின் வேறுபாடு 2 எனில், அது இரட்டைப் பகா எண்கள் எனப்படும்.
எ.கா. (5, 7), (17, 19)

23) மூன்று தொடர்ச்சியான பகா எண்களுக்கு இடையே உள்ள வேறுபாடு 2 எனில், அந்தப் பகா எண்கள் ஒரு பகா மூன்றன் தொகுதியை அமைக்கும். அவ்வாறு அமையும் ஒரே பகா மூன்றன் தொகுதியானது (3, 5, 7) ஆகும்.

24) 2 ஆல் வகுபடும் தன்மை:
ஓர் எண்ணின் ஒன்றாம் இலக்கம் 2, 4, 6, 8 மற்றும் 0 ஆகிய எண்களில் ஏதேனும் ஓர் எண்ணாக இருந்தால் அந்த எண் 2 ஆல் வகுபடும்.

25) 3 ஆல் வகுபடும் தன்மை:
ஓர் எண்ணின் இலக்கங்களின் கூடுதல் 3 ஆல் வகுபடும் எனில், அந்த எண் 3 ஆல் வகுபடும்.

26) 5 ஆல் வகுபடும் தன்மை:
ஓர் எண்ணின் ஒன்றாம் இலக்கத்தில் 0 அல்லது 5 என்று இருந்தால் அந்த எண் 5 ஆல் வகுபடும்.

V.ARUMUGAM, M.Sc.,M.Ed.,
கற்கண்டு கணிதம்
9486136884
(whats App)
http://tnpsc-shortcut-maths.blogspot.in/

27) 4 ஆல் வகுபடும் தன்மை:

ஓர் எண்ணின் கடைசி இரண்டு இலக்கங்கள் 4 ஆல் வகுபடும் எனில், அந்த எண் 4 ஆல் வகுபடும். குறிப்பாக கடைசி இரு இலக்கங்கள் பூச்சியங்களாக இருந்தாலும் அந்த எண் 4 ஆல் வகுபடும்.

28) 6 ஆல் வகுபடும் தன்மை:

ஓர் எண்ணானது 2 மற்றும் 3 ஆல் வகுபடும் எனில், அந்த எண் 6 ஆல் வகுபடும்.

29) 8 ஆல் வகுபடும் தன்மை:

ஓர் எண்ணின் கடைசி மூன்று இலக்கங்கள் 8 ஆல் வகுபடும் எனில், அந்த எண் 8 ஆல் வகுபடும். குறிப்பாகக் கடைசி மூன்று இலக்கங்கள் பூச்சியமாக இருந்தாலும் அந்த எண் 8 ஆல் வகுபடும்.

30) 9 ஆல் வகுபடும் தன்மை:

ஓர் எண்ணின் இலக்கங்களின் கூடுதல் 9 ஆல் வகுபடும் எனில், அந்த எண் 9 ஆல் வகுபடும்.

31) 9 ஆல் வகுபடும் எண்கள் அனைத்தும் 3 ஆல் வகுபடும்.

32) 10 ஆல் வகுபடும் தன்மை:

ஓர் எண்ணின் ஒன்றாம் இலக்கம் பூச்சியம் எனில், அந்த எண் 10 ஆல் வகுபடும்.

33) 10 ஆல் வகுபடும் எண்கள் அனைத்தும் 5 ஆல் வகுபடும்.

V.ARUMUGAM, M.Sc.,M.Ed.,
கற்கண்டு கணிதம்
9486136884
(whats App)
http://tnpsc-shortcut-maths.blogspot.in/

34) 11 ஆல் வகுபடும் தன்மை:

ஓர் எண் 11 ஆல் வகுபட, அவ்வெண்ணின், ஒன்று விட்ட இலக்கங்களின் கூடுதல்களின் வேறுபாடு 0 ஆகவோ அல்லது 11 ஆல் வகுபடுவதாகவோ இருந்தால் அந்த எண் 11 ஆல் வகுபடும்.

35) கொடுக்கப்பட்ட ஓர் எண்ணைப் பகாக் காரணிகளின் பெருக்கற்பலனாக எழுதுவது பகாக் காரணிப்படுத்துதல் எனப்படும்.

36) பகாக் காரணிகளை இரண்டு முறைகளில் கண்டறியலாம்

1. வகுத்தல் முறை 2. காரணிச்செடி முறை.

37) 2 மற்றும் 3 என்ற எண்களைத் தவிர எல்லாப் பகா எண்களும் 6 இன் மடங்குகளை விட 1 அதிகமாகவோ அல்லது 1 குறைவாகவோ இருக்கும்.

எ.கா. $37 = 6\times6 + 1$

38) மீ.பெ.வ / மீ.பொ.கா:

* மீப்பெரு பொதுக் காரணி (மீ.பொ.கா) என்பது இரண்டு எண்களின் மிகப்பெரிய பொதுக் காரணி ஆகும்.
* மீப்பெரு பொதுக் காரணியை மீப்பெரு பொது வகுத்தி (மீ.பொ.வ) எனவும் கூறலாம்.
* மீ.பொ.கா. $(1, x) = 1$
* y என்பது x இன் மடங்கு எனில், மீ.பொ.கா. $(x, y) = x$.

எ.கா. மீ.பொ.கா. $(3, 6) = 3$

V.ARUMUGAM, M.Sc.,M.Ed.,
கற்கண்டு கணிதம்
9486136884
(whats App)
http://tnpsc-shortcut-maths.blogspot.in/

39) இரண்டு எண்களுக்கான மீப்பெரு பொதுக் காரணி (மீ.பெ.கா) 1 எனில், அவ்வெண்கள் சார்பகா எண்கள் அல்லது இணைப்பகா எண்கள் எனப்படும். சார்பகா எண்களில் இரண்டு எண்களும் பகா எண்களாகவோ, இரண்டு எண்களும் பகு எண்களாகவோ அல்லது ஒரு எண் பகா எண் மற்றோர் எண் பகு எண்ணாகவோ இருக்கலாம்.

எ.கா. (5, 7), (14, 27), (11, 12)

40) ஓர் எண்ணின் மடங்குகளின் எண்ணிக்கை முடிவில்லாமல் தொடர்ந்து செல்லும்.

41) மீ.சி.ம.:

பூச்சியமற்ற இரு முழு எண்களின் மீச்சிறு பொது மடங்கு என்பது அவ்விரு எண்களின் மிகச் சிறிய பொது மடங்காகும்.

42) மீச்சிறு பொது மடங்கை இரண்டு முறைகளில் கண்டறியலாம்.

1. வகுத்தல் முறை 2. பகாக் காரணிப்படுத்தல் முறை.

43) மீ.சி.ம. ஆனது எப்பொழுதும் கொடுக்கப்பட்ட எண்களில் பெரிய எண்ணை விடப் பெரியதாகவோ அல்லது சமமாகவோ இருக்கும்.

44) மீ.சி.ம. ஆனது எப்போதும் மீ.பெ.கா.-வின் மடங்காக இருக்கும்.

45) எவையேனும் 2 எண்கள் x மற்றும் y ஆகியவற்றிற்கு

$x \times y =$ மீ.பெ.கா. $\times$ மீ.சி.ம.

V.ARUMUGAM, M.Sc.,M.Ed.,
கற்கண்டு கணிதம்
9486136884
(whats App)
http://tnpsc-shortcut-maths.blogspot.in/

46) இரு எண்களில், ஓர் எண்ணின் காரணிகளின் (அந்த எண்ணைத் தவிர்த்து) கூடுதலானது மற்றோர் எண்ணைத் தரும் எனில், அவை இணக்கமான எண்கள் எனப்படும்.

எ.கா. 220 மற்றும் 284

220 ன் காரணிகள் = 1, 2, 4, 5, 10, 11, 20, 22, 44, 55, 110

$1+2+4+5+10+11+20+22+44+55+110 = 284.$

284 ன் காரணிகள் = 1, 2, 4, 71, 142

$1+2+4+71+142 = 220.$

V.ARUMUGAM, M.Sc.,M.Ed.,
கற்கண்டு கணிதம்
9486136884
(whats App)
http://tnpsc-shortcut-maths.blogspot.in/

2. அளவைகள்

1) 1971 ஆம் ஆண்டு நடந்த 'எடைகள் மற்றும் அளவைகள்' பொது மாநாட்டில் பொதுவான மெட்ரிக் அளவைகள் வரையறுக்கப்பட்டன.

2) அடிப்படை மெட்ரிக் அளவைகள் மீட்டர், லிட்டர், கிராம், வினாடி போன்றன. இவை அனைத்தும் தசம எண் முறையான (10 அடிமானம்) அடிப்படையாகக் கொண்டவை.

3) மெட்ரிக் அளவைகள் அட்டவணை:

கிலோ மீட்டர் (கி.மீ.)	ஹெக்டா மீட்டர் (ஹெ.மீ.)	டெகா மீட்டர் (டெகா.மீ.)	கிராம் மீட்டர் (மீ)	டெசி மீட்டர் (டெசி.மீ.)	செண்டி மீட்டர் (செ.மீ)	மில்லி மீட்டர் (மி.மீ.)
			எடை கிராம்			
			கொள்ளளவு லிட்டர்			

4) 1 கி.மீ. = 1000 மீ.

1 மீ = 100 செ.மீ.

1 மீ = 1000 மி.மீ.

1 செ.மீ = 10 மி.மீ.

1 கி.கி. = 1000 கி.

1 கி = 1000 மி.கி.

1 கி.லி. = 1000 லி.

1 லி. = 1000 மி.லி.

V.ARUMUGAM, M.Sc.,M.Ed.,
கற்கண்டு கணிதம்
9486136884
(whats App)
http://tnpsc-shortcut-maths.blogspot.in/

5) ஒரு தசம எண்ணை 10, 100, 1000, 10000 ஆல் பெருக்கும் போது, தசமப்புள்ளியை முறையே வலப்புறமாக 1, 2, 3, 4 இடங்களுக்கு நகர்த்த வேண்டும்.

6) ஒரு தசம எண்ணை 10, 100, 1000, 10000 ஆல் வகுக்கும் போது, தசமப்புள்ளியை முறையே இடப்புறமாக 1, 2, 3, 4 இடங்களுக்கு நகர்த்த வேண்டும்.

7) காலத்தை அளக்கும் கடிகாரங்களைப் பற்றிய படிப்பிற்கு ஹாராலஜி என்று பெயர்.

8) காலத்தின் அலகுகள் வினாடி, நிமிடம், மணி, நாள், வாரம், மாதம், ஆண்டு போன்றவையாகும்.

9) 12 மணி நேர அமைப்புக் கடிகாரத்தில் முற்பகல் (மு.ப.) மற்றும் பிற்பகல் (பி.ப) எனக் குறிப்பிடப்படுகிறது. இந்த கடிகாரத்தில் சரியாக இரவு 12 மணியை நள்ளிரவு என்றும் சரியாகப் பகல் 12 மணியை நண்பகல் என்றும் அழைக்கிறோம்.

10) முற்பகல் (மு.ப – a.m.) என்பது நள்ளிரவு 12 மணிக்குப் பிறகும் நண்பகல் 12 மணிக்கு முன்பு வரையும் ஆகும்.

11) பிற்பகல் (பி.ப. – p.m.) என்பது நண்பகல் 12 மணிக்குப் பிறகும் நள்ளிரவு 12 மணிக்கு முன்பு வரையும் ஆகும்.

V.ARUMUGAM, M.Sc.,M.Ed.,
கற்கண்டு கணிதம்
9486136884
(whats App)
http://tnpsc-shortcut-maths.blogspot.in/

12) தொடர் வண்டி நேரம் பொதுவாக 4 இலக்கத்தில் குறிக்கப்படுகிறது. இதில் முதல் இரண்டு இலக்கங்கள் மணிகளையும் கடைசி இரண்டு இலக்கங்கள் நிமிடங்களையும் குறிக்கும்.

13) ஒரு நேர அமைப்பிலிருந்து மற்றோர் அமைப்பிற்கு மாற்றுகையில், இரண்டு நேர அமைப்பிலும் நிமிடத்தில் மாற்றம் இருக்காது.

14) பூமி, சூரியனை ஒரு முழுச் சுற்றுச் சுற்றி வர 365 நாள்கள் மற்றும் 6 மணி எடுத்துக் கொள்ளும்.

15) 365 நாள்களை 1 ஆண்டாக எடுத்துக் கொள்கிறோம். ஒவ்வோர் ஆண்டிலும் மீதம் 6 மணி நேரத்தைச் சரி செய்ய, ஒவ்வொரு 4 ஆண்டிற்கு ஒரு முறை ஒரு நாளைச் சேர்த்துக் கொள்கிறோம்.
(4 ஆண்டுகள் × 6 மணி = 24 மணி = 1 நாள்).

16) ஒவ்வொரு 4 ஆவது ஆண்டும் 365 நாள்கள் + 1 நாள் = 366 நாள்களைப் பெற்றிருக்கும். இந்த 1 நாள் ஒவ்வொரு 4 ஆவது ஆண்டில் வரும் பிப்ரவரி மாதத்தில் சேர்க்கப்படும். எனவே 366 நாள்கள் கொண்ட ஆண்டை லீப் ஆண்டு என்கிறோம்.

17) பொதுவாகக் கொடுக்கப்பட்ட ஆண்டு 4 ஆல் மீதியின்றி வகுபட்டால் அது லீப் ஆண்டு ஆகும்.

18) நூறின் மடங்குகளாக உள்ள ஆண்டுகள் நூற்றாண்டுகள் ஆகும். 400 ஆல் வகுபடும் நூற்றாண்டுகள் லீப் ஆண்டுகள் ஆகும்.

V.ARUMUGAM, M.Sc.,M.Ed.,
கற்கண்டு கணிதம்
9486136884
(whats App)
http://tnpsc-shortcut-maths.blogspot.in/

19) வெள்ளி விழா – 25 வது ஆண்டு

மாணிக்க விழா – 40 வது ஆண்டு

பொன் விழா – 50 வது ஆண்டு

வைர விழா – 60 வது ஆண்டு

மணி விழா – 65 வது ஆண்டு

பிளாட்டின விழா – 70 வது ஆண்டு

20) 10 ஆண்டுகள் = 1 பத்தாண்டு 2

100 ஆண்டுகள் = 1 நூற்றாண்டு 3

1000 ஆண்டுகள் = 1 புத்தாயிரம்

21 ஆம் நூற்றாண்டு = 2001 – 2100 4)

நாம் 21 ஆம் நூற்றாண்டில் வாழ்கிறோம்.

3 வது புத்தாயிரம் = 2001 – 3000 ஆண்டுகள்.

நாம் 3 வது புத்தாயிரத்தில் வாழ்கிறோம்.

V.ARUMUGAM, M.Sc.,M.Ed.,
கற்கண்டு கணிதம்
9486136884
(whats App)
http://tnpsc-shortcut-maths.blogspot.in/

3. பட்டியல், இலாபம் மற்றும் நட்டம்

1) ஒவ்வொரு பட்டியலும் அங்காடியின் பெயர், பட்டியல் எண், நாள், பொருள்களின் எண்ணிக்கை, விலை, ஒவ்வொரு பொருளின் மதிப்பு மற்றும் பட்டியலின் மொத்தத் தொகை போன்றவற்றைப் பெற்றிருக்கும்.

2) அடக்க விலை = வாங்கிய விலை + கூடுதல் செலவுகள்.

3) குறித்த விலை − தள்ளுபடி = விற்பனை விலை.

4) * அடக்க விலை < விற்பனை விலை எனில் இலாபம் ஆகும்.

இலாபம் = விற்பனை விலை − அடக்க விலை.

* அடக்க விலை > விற்பனை விலை எனில் நட்டம் ஆகும்.

நட்டம் = அடக்க விலை − விற்பனை விலை.

* அடக்க விலை = விற்பனை விலை எனில் இலாபமுமில்லை நட்டமுமில்லை.

* தள்ளுபடி = குறித்த விலை − விற்பனை விலை.

விற்பனை விலை = குறித்த விலை − தள்ளுபடி

* தள்ளுபடி இல்லையெனில்

குறித்த விலை = விற்பனை விலை.

V.ARUMUGAM, M.Sc.,M.Ed.,
கற்கண்டு கணிதம்
9486136884
(whats App)
http://tnpsc-shortcut-maths.blogspot.in/

4. வடிவியல்

1) மூன்று கோட்டுத் துண்டுகளால் அமைந்த ஒரு மூடிய உருவமே முக்கோணம் ஆகும்.

2) ஒரு முக்கோணமானது 3 பக்கங்கள், 3 கோணங்கள் மற்றும் 3 முனைகளைப் பெற்றிருக்கும்.

3) ஒரு முக்கோணத்தின் மூன்று கோணங்களும் வெவ்வேறானவை எனில் மூன்று பக்கங்களும் வெவ்வேறானவை.

4) ஒரு முக்கோணத்தின் இரண்டு கோணங்கள் சமம் எனில் இரண்டு பக்கங்கள் சமம்.

5) ஒரு முக்கோணத்தின் மூன்று கோணங்களும் சமம் எனில் மூன்று பக்கங்களும் சமம். ஒவ்வொரு கோணமும் 60° ஆக இருக்கும்.

6) ஒரு முக்கோணத்தின் மூன்று கோணங்களின் கூடுதல் 180°.

7)
* ஒரு முக்கோணத்தின் மூன்று பக்கங்களும் வெவ்வேறு அளவுடையவை எனில் அது ஓர் அசமபக்க முக்கோணம் ஆகும்.
* ஒரு முக்கோணத்தின் ஏவையேனும் இரண்டு பக்கங்கள் சம அளவுடையவை எனில் அது ஓர் இருசமபக்க முக்கோணம் ஆகும்.

V.ARUMUGAM, M.Sc.,M.Ed.,
கற்கண்டு கணிதம்
9486136884
(whats App)
http://tnpsc-shortcut-maths.blogspot.in/

* ஒரு முக்கோணத்தின் மூன்று பக்கங்களும் சம அளவுடையவை எனில் அது ஒரு சமபக்க முக்கோணம் ஆகும்.

இவ்வாறு பக்கங்களின் அடிப்படையில் முக்கோணங்களை 3 வகைகளாகப் பிரிக்கலாம்.

8) * ஒரு முக்கோணத்தின் மூன்று கோணங்களும் குறுங்கோணங்களாக (0° க்கு மேல் 90° க்குள்) இருப்பின் அது ஒரு குறுங்கோண முக்கோணம் ஆகும்.

* ஒரு முக்கோணத்தின் ஏதேனும் ஒரு கோணம் செங்கோணமாக (90°) இருப்பின் அது ஒரு செங்கோண முக்கோணம் ஆகும்.

* ஒரு முக்கோணத்தின் ஏதேனும் ஒரு கோணம் விரிகோணமாக (90° க்கு மேல் 180° க்குள்) இருப்பின் அது ஒரு விரிகோண முக்கோணம் ஆகும்.

இவ்வாறு, கோணங்களின் அடிப்படையில் முக்கோணங்களை 3 வகைகளாகப் பிரிக்கலாம்.

9) ஒரு முக்கோணத்தில் மூன்று கோணங்களும் குறுங்கோணங்களாக இருக்கலாம். ஆனால் ஒன்றுக்கு மேற்பட்ட கோணங்கள் செங்கோணங்களாகவோ அல்லது விரிகோணங்களாகவோ இருக்க இயலாது.

V.ARUMUGAM, M.Sc.,M.Ed.,
கற்கண்டு கணிதம்
9486136884
(whats App)
http://tnpsc-shortcut-maths.blogspot.in/

10) மூன்று பக்க அளவுகளும் சமம் எனில் உறுதியாக முக்கோணம் அமைக்க இயலும்.

11) ஒரு முக்கோணத்தின் எவையேனும் இரு பக்க அளவுகளின் கூடுதல் மூன்றாவது பக்க அளவை விட அதிகமாக இருக்கும். இது முக்கோணச் சமனின்மைப் பண்பாகும்.

$$AB + BC > CA$$

$$BC + CA > AB$$

$$CA + AB > BC$$



12) ஒரு முக்கோணத்தின் எவையேனும் இரு பக்கங்கள் கொடுக்கப்பட்டிருப்பின் மூன்றாவது பக்கமானது, இரு பக்கங்களின் வித்தியாசம் மற்றும் கூடுதல் ஆகியவற்றின் இடையில் அமையும்.

13) ஒரு முக்கோணத்தின் இரண்டு பெரிய பக்கங்களின் வித்தியாசம் மூன்றாவது பக்கத்தை விடக் குறைவாக இருக்கும்.

14) ஒரு செங்கோண முக்கோணத்தில் மற்ற இரு கோணங்கள் குறுங்கோணங்களாக அமையும்.

V.ARUMUGAM, M.Sc.,M.Ed.,
கற்கண்டு கணிதம்
9486136884
(whats App)
http://tnpsc-shortcut-maths.blogspot.in/

15) மூலை மட்டங்கள்:

கணித உபகரணப் பெட்டியில் முக்கோண வடிவில் இரண்டு மூலைமட்டங்கள் உள்ளன. ஒவ்வொரு மூலைமட்டத்திலும் ஒரு செங்கோணம் உள்ளது. ஒரு மூலைமட்டத்தின் கோணங்கள் 30°, 60°, 90° எனவும், மற்றொரு மூலைமட்டத்தின் கோணங்கள் 45°, 45°, 90° எனவும் இருக்கும்.

16) மூலைமட்டங்களின் பயன்கள்:

* 30°, 45°, 60°, 90° ஆகிய கோணங்களை அமைத்தல்
* இணை கோடுகள் மற்றும் செங்குத்துக் கோடுகள் வரைதல்
* வடிவங்களின் உயரங்களை அளத்தல்.

17) இரண்டு இணை கோடுகளுக்கு இடைப்பட்ட செங்குத்துத் தொலைவு மாறாமல் இருக்கும்.

18) இணையாக அமைந்த கோட்டுத் துண்டுகள் சம நீளமுடையதாக இருக்க வேண்டிய அவசியமில்லை.

V.ARUMUGAM, M.Sc.,M.Ed.,
கற்கண்டு கணிதம்
9486136884
(whats App)
http://tnpsc-shortcut-maths.blogspot.in/

5. தகவல் செயலாக்கம்

1) மரவுரு வரைபடம் முறையில் கணினியானது பல்வேறு செயல்பாடுகளை ஒரே நேரத்தில் சீரான முறையில் கணக்கிட்டு விடைகளை கொடுக்கின்றது.

2) எண் கோவை மற்றும் இயற்கணிதக் கோவை இரண்டையும் மரவுரு வரைபடத்தில் குறிப்பிடலாம்.

V.ARUMUGAM, M.Sc.,M.Ed.,
கற்கண்டு கணிதம்
9486136884
(whats App)
http://tnpsc-shortcut-maths.blogspot.in/